## சுருக்கம்

சேலம் மாவட்டம் – ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருந்து வரும் அப்பமசமுத்திரம் – நரசிங்கபுரம் வரையுள்ள (0/0 – 0/450 கி.மீ. நீளம்) சாலையை நெடுஞ்சாலைத் துறையின் தொடர் பராமரிப்பிற்கு மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.2) துறை**

அரசாணை (2டி) எண்.50 நாள்: 04.08.2010

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 29366/2010/பரா 3.1, நாள் 21.05.2010.

-----

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருந்து வரும் அப்பமசமுத்திரம்– நரசிங்கபுரம் வரையுள்ள (0/0 – 0/450 கி.மீ. நீளம்) ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய சாலை அப்பமசமுத்திரம் தென்னங்குடிபாளையம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட 10க்கும் மேற்பட்ட குக்கிராமங்களை இணைக்கும் இணைப்பு சாலையாகவும், மேற்படி குக்கிராமங்களில் வசிக்கும் சுமார் 10,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நரசிங்கபுரம் நகர் பகுதி வழியாக ஆத்தூர், சேலம், சென்னை போன்ற நகர் பகுதிகளுக்கு செல்வதற்கு அன்றாடம் பயன்படும் ஒரே பிரதான சாலையானது ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளது என்றும், மேலும் இச்சாலை அப்பமசமுத்திரம்–இராமநாதபுரம் நெடுஞ்சாலையின் (கி.மீ. 0/0-1/700) தொடர் சாலையாகவும், அப்பமசமுத்திரம்–ராமநாதபுரம் நெடுஞ்சாலையை சேலம் உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலையுடன் (NH 68) இணைக்கும் இணைப்பு சாலையாகவும் உள்ளது என்றும், இச்சாலையின் குறுக்கே ஓடும் வசிஷ்ட நதியில் மழைக்காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மேற்படி குக்கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் சுமார் 1/2 கி.மீ. தொலைவிலுள்ள நரசிங்கபுரம் நகர் பகுதியிலுள்ள பேருந்து நிறுத்தத்திற்கு வருவதற்கு சுமார் 10 கி.மீ. தொலைவிற்கு சுற்றி வரவேண்டியுள்ளதால், வசிஷ்டநதியில் ஒரு மேம்பாலம் அமைப்பது அவசியமாகும் என்றும், மேற்படி மேம்பாலம் அமைத்திட ரூ.2 கோடிக்கு மேல் செலவாகும் என்பதாலும், அப்பமசமுத்திரம்–நரசிங்கபுரம் ஊராட்சி ஒன்றிய சாலையை தொடர் பராமரிப்பிற்காகவும், மேம்பாலம் அமைத்திடும் பொருட்டும் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழு இசைவளித்து தீர்மான எண்.21 (240) நாள் 28.01.2010ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, சேலம் மாவட்டம், அப்பமசமுத்திரம் – நரசிங்கபுரம்

..2..

வரையுள்ள (0/0-0/450 கி.மீ. நீளம்) சாலையினை நெடுஞ்சாலைத் துறையின் தொடர் பராமரிப்பிற்கு மாற்றம் செய்யக்கோரியுள்ள சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருந்து வரும் அப்பமசமுத்திரம்–நரசிங்கபுரம் வரையுள்ள 0/0 – 0/450 கி.மீ. நீளமுள்ள சாலையினை நெடுஞ்சாலைத் துறையின் தொடர் பராமரிப்பிற்கு மாற்றம் செய்யலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,
சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
சேலம்.
தலைமைப் பொறியாளர் (பொது),
நெடுஞ்சாலைத் துறை,
சேப்பாக்கம், சென்னை–600 005.
மாநில கணக்காயர், சென்னை–600 006/18/35

<u>நகல்:</u>
நெடுஞ்சாலைத் துறை, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச்
செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.